**சார்பு நீதிமன்றம். துறையூர்**

**முன்னிலை .. திரு. C.விஜய் கார்த்திக் M.A,M.L.,**
**சார்பு நீதிபதி,**
**துறையூர்.**
**2025-ம் ஆண்டு ஜூன் மாதம் 28-ம் நாள் சனிக்கிழமை**

**இடைநிலை மனு எண்.4/2025 இன் அசல் வழக்கு எண்.83/2024**

1. மணி
2. சுதா .... மனுதாரர்/பிரதிவாதிகள்

/எதிராக/

பெரியசாமி .... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு இறுதியாக என் முன்பு கடந்த 23.06.2025 -ம் தேதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S. தென்னரசு அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S. சுரேந்திரன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்டும், மனுக்கள் ஆவணங்களை பரிசீலனை செய்தும் நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

அசல் வழக்கில் மனுதாரர்களுக்கு எதிராக கடந்த 28.01.2025-ம் தேதி பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பை ரத்து செய்ய கோரி உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் கட்டளை 9 விதி 7 -ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர்களின் மனுசுருக்கம்:-**

2.மனுதாரர்/1-ம் பிரதிவாதி 2-ம் பிரதிவாதிக்காகவும், சேர்த்து இந்த மனுவை தாக்கல் செய்கிறார். அசல் வழக்கினை வாதி மனுதாரர்களுக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கிற்கு மனுதாரர்கள் எதிர்வழக்குரை மற்றும் எதிருரை தாக்கல் செய்ய 28.01.2025 -ம் தேதி வாய்தா போடப்பட்டிருந்தது. அன்றையதினம் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினாலும் வழக்கு சம்மந்தப்பட்ட சில ஆவணங்கள் வேண்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்து ஆவணங்கள் கைக்கு கிடைக்காத காரணத்தினாலும் அன்றைய தினம் மனுதாரர்கள் வழக்கறிஞரை சென்று பார்க்கவில்லை. எனவே, பதிலுரை தாக்கல் செய்யவில்லை என வழக்கில் மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. மேற்படி உத்தரவினை நீக்கரவு செய்து இன்று தாக்கல் செய்யும் இம்மனுவுடன் கூடிய பதிலுரையை ஏற்று

வழக்கினை மேல்நடத்த அனுமதி அளித்து உத்தரவிட வேண்டியது அவசியமானதாகும். எனவே, அசல் வழக்கில் மனுதாரருக்கு எதிராக கடந்த 28.01.2025-ம் தேதி பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பை ரத்து செய்ய கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>எதிர்மனுதாரரின் பதிலுரை சுருக்கம்:-</u>**

(3.1)மனுதாரரின் மனு மோசடி. பிசகு மனுவும் சட்டப்படியும், நியாயப்படியும் நிலை நிற்கத்தக்கதல்ல. மனுவில் மனுதாரர்கள் கோரும் பரிகாரம் எவ்விதத்திலும் மனுதாரர்களுக்கு கிடைக்கக்கூடியதல்ல. மனுதாரர்களும், எதிர்மனுதாரரும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்ற காரணத்தினால் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்து வாதி தரப்பு ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக போடப்பட்டிருந்த வாய்தாவில் விசாரணை தொடங்க இருப்பதை தெரிந்துகொண்டு எதிர்மனுதாரர் நீதிமன்றத்திற்கு செல்ல இருப்பதை முன்கூட்டியே அறிந்துகொண்ட மனுதாரர்கள் பொய்யான காரணங்களை கூறி இ.நி.ம.எண்.2/2024 -ல் ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய கோரி மனுவும், அசல் வழக்கில் ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய கோரி மனுவும் எதிருரை, எதிர்வழக்குரை ஆகியவைகள் அவசரமாக தாக்கல் செய்துள்ளார்கள் என்பதே உண்மை.

(3.2)மனு சொத்து எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சுயசம்பாத்திய சொத்து. அதில் 2-ம் மனுதாரர் தனது உடன் பிறந்த சகோதரி என்ற காரணத்தினாலும், தனியாக வீடு கட்டி குடியேறும் வரை மனு சொத்தில் சில காலம் தங்கிகொள்கிறேன் என்று கேட்டுக்கொண்டதை அடுத்து எதிர்மனுதாரர் அனுமதித்தன் பேரில் மனுதாரர்கள் மனு சொத்தில் குடியிருந்துகொண்டு வீட்டை காலி செய்யாமல் எதிர்மனுதாரருக்கு சொந்தமான மனு சொத்தில் மாடுகளை மேய்த்து தொந்தரவு செய்தும், பயிர்களை வளரவிடாமல் நாசம் செய்து வருவதால் தான் மேற்படி வழக்கை மாண்புமிகு நீதிமன்றத்தில் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ளார். மனு சொத்தானது எதிர்மனுதாரர் பெயரிலேயே பத்திரம் மற்றும் பட்டா ஆகியவை உள்ளன. மனுதாரர்கள் பெயரில் எவ்விதமான ஆவணங்களும் இல்லை. இவ்வாறு இருக்க மின்சார இணைப்பே இல்லாத மனு சொத்தின் வீட்டில் மின் இணைப்பு இருப்பதாகவும், மேற்படி மின் இணைப்பு மனுதாரர்கள் பெயரில் இருப்பதாகவும் கூறியுள்ள சங்கதிகள் மோசடியானவை. மேற்படி சங்கதிகளை நிரூபிக்க மனுதாரர்களே கடமைப்பட்டவர்கள். நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்று சொல்லிக்கொள்வதற்காகவே மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்களா. மனு நிலைக்கத்தக்கதல்ல. மனு தள்ளுபடி செய்யக்கூடியது.

4.இருதரப்பு மனுக்கள், ஆவணங்களை பரிசீலனை செய்ததில், இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதாகும்.

**தீர்வு..**

(5.1)மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இம்மனுவில் அசல் வழக்கில் தங்களுக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை சார்வு செய்யப்பட்டிருந்தது எனவும், அசல் வழக்கை எதிர்மனுதாரர் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்து அதில் கடந்த 28.01.2025-ம் தேதி தங்களுக்கு எதிராக ஒருதலைபட்ச தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், அன்றைய தினம் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லை என்றும், சில முக்கிய ஆவணங்கள் கைக்கு கிடைக்கவில்லை என்றும், இந்த மனுவை அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பை ரத்து செய்ய கோரி தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர் தரப்பில் இந்த மனுவை அனுமதிக்க ஆட்சேபனை தெரிவித்து மனுதாரர் மனுவில் தெரிவித்திருந்த காரணங்கள் உண்மையானதல்ல எனவும், இந்த எதிர்மனுதாரருக்கு வீண் தொல்லை கொடுத்து வருகிறார் என்பதால் தான் அசல் வழக்கையே தாக்கல் செய்திருப்பதாகவும், தாவா சொத்தை பொறுத்து வழக்கு நிலுவையில் உள்ளது என ஊருக்குள் சொல்லிக்கொள்வதற்காகவே இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், இந்த மனு நல்ல எண்ணத்தின் அடிப்படையில் தாக்கல் செய்யப்படவில்லை எனவும் தெரிவித்து இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(5.2)அசல் வழக்கை எதிர்மனுதாரர்/வாதி மனுதாரருக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதிக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை அனுப்பப்பட்டு பிரதிவாதி அதனை பெற்றுக்கொண்டுள்ளது வழக்கு ஆவணங்களிலிருந்து அறியமுடிகிறது. மேலும் 1-ம் மனுதாரர் தனக்கு உடல்நிலை சரியில்லை என்பதாலும், ஆவணங்கள் கிடைக்கவில்லை என்பதாலும் தான் வழக்கறிஞரை சந்திக்க இயலவில்லை என தெரிவித்துள்ளார். மேலும் இம்மனுவுடன் அசல் வழக்கிற்கான எதிர்வழக்குரையும், இடைநிலை மனுவிற்கான எதிருரையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர் எதிருரையில் மனுதாரர்கள் தங்களுக்கு வீண் தொல்லைகள் கொடுப்பதால் தான் அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளதாக தெரிவித்துள்ளனர். எதிர்மனுதாரர் கூற்றினை கருத்தில் கொண்டும், வழக்கில் நிரந்தர தீர்வு காண வேண்டுமென்பதற்காகவும், இருதரப்பையும் கேட்டு பிறப்பிக்கப்படும் தீர்ப்பே முறையானதாக இருக்கும் என்பதாலும், அசல் வழக்கு 2024-ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்பதை கருத்தில் கொண்டும், மனுதாரர்களுக்கு அசல் வழக்கின் தன்மையை கருதி அசல் வழக்கில் எதிர்வாதம் செய்ய ஒரு வாய்ப்பு வழங்குவது நீதியின்பால் உகந்தது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து அசல் வழக்கில் சரியான தீர்வு காண்பதற்காகவும், பின்னிட்டு ஏற்படும்

வழக்குகளை தவிர்ப்பதற்காகவும், எதிர்மனுதாரரின் பதிலுரையை கவனத்தில் கொண்டும் இந்த மனுவை கீழ்கண்ட செலவு தொகையுடன் அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக, மனு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு மனுதாரர்கள்/பிரதிவாதிகள் ரூ.500/- ஐ எதிர்மனுதாரர்/வாதிக்கு வரும் 04.07.2025-ம் தேதிக்குள் செலுத்தும் பட்சத்தில் இந்த மனு அனுமதிக்கப்படும் என உத்தரவிடப்படுகிறது. அழைக்க 04.07.2025.

இன்று 2025-ம் ஆண்டு ஜுன் மாதம் 28-ம் நாள் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு மொழியப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியபகரப்பட்டது.

(Sd)/-C. Vijay karthik
சார்பு நீதிபதி,
துறையூர்.

**மனுதாரர், எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்.** இல்லை.

(Sd)/-C. Vijay karthik
சார்பு நீதிபதி,
துறையூர்.